# மேனி கோப்பளித்ததோ?

**[உருவகக் காட்சி]**

மூதுமாலை தழுவிய ஒரு சோலையில் மொய்குழல் ஒருத்தி ஐயனை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றாள். காதல் கனலாகின்றது.

அவள் வானை நோக்குகின்றாள். வானிற் பூரித்த மீன்களை நோக்குகின்றாள்.

பாட்டு

மேனிகொப் பளித்ததோ வானப்பெண்ணே—எங்கும்
வெண்முத் திறைந்தனவோ வானப்பெண்ணே!
நானே வரேன் என்று வாராததால்— அவன்
நாளோடு தோளைவந்து சேராததால்
மேனிகொப் பளித்ததோ வானப் பெண்ணே!

(மாமரத்தின் பின் ஒளிந்து கொண்டிருந்த குறும்புக் காரத் தலைவன் அவளை எட்டிப் பார்த்துச் சிரித்துப் பாடு கின்றான்.)

ஏனோடி பூவில்லை கொண்டையிலே?— அடி
இங்கேபார் மாமரத்தின் அண்டையிலே

தேனோடைப் பக்கம் திரும்பாததால்—தேன்
விரும்பி அருந்திட விரும்பாததால்
மேனிகொப் பளித்ததோ வானப்பெண்ணே!

*(திரும்பிப் பார்த்தவன் விரும்பி ஓடிவரவில்லை. வந்தவன் நேரே ஓடி வாராமல் மாமரத்தைத் தழுவியது வருத்தத்தை அளித்தது. அவள் பாடுகின்றாள்.)*

பாட்டு

மாவேஅக் காளைக்குக் காப்பிட்டதோ—மா
மாவாவா என்றுதான் கூப்பிட்டதோ
சாவோடு மாரடிக்கும் பெண்ணாதலால்—இங்குத்
தாவிப் பறந்துவர எண்ணாததால்
மேனிகொப் பளித்ததோ வானப்பெண்ணே?

*(மா, அதாவது மாமரத்துக்கும் அவனுக்கும் உண்டாயிருந்த தொடர்புபற்றி இழித்துக் கூறிய தலைவியை நோக்கி, 'நீ மட்டும் சாவோடு கொண்ட தொடர்பு சரியா? அதை நீ விடு. நான் மாவோடு கொண்ட தொடர்பை விடுகின்றேன்.' என்று பாடுகிறான் தலைவன்)*

மாவைநான் விட்டிடுவேன் வஞ்சிக்கொடி—கெட்ட
சாவைநீ விட்டுவிட்டு வாஇப்படி
வாழ்வோடும் இன்பத்தைக் கூட்டாததால்— இங்கு
வந்தேறும் துன்பத்தை ஓட்டாததால்
மேனிகொப் பளித்ததோ வானப்பெண்ணே

*(இருவரும் கூடி இன்புறுகின்றார்கள்.)*